**மஹாஓயா பிரதேச சபை**
**அம்பாறை மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மே 23 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 19 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மஹாஓயா பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் கொள்ளைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டு அடிப்படை மற்றும் கணக்கீட்டு கொள்கை நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமான மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகளின் பெறுமதியானது ரூபா 65,288,562 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 67,471,002 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால், நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 2,182,440 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வாகன பழுதுபார்த்தல் செலவினங்களான ரூபா 89,900 தொகையினை மூலதனமாக்கியமையின் காரணத்தால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈட்டத்திற்கான வருமானத்திலான பங்களிப்புக் கணக்கானது அந்த பெறுமதியல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) UNDP நன்கொடைகள் மற்றும் சபையின் நிதியங்களின் கீழ் ரூபா 15 மில்லியன் செலவிடப்பட்டு 2017 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த உனுவதுர புபுல கடைகளின் சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய 2013 முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 360,321 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 311,021 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால் நடைமுறைச் பொறுப்புகள் ரூபா 49,300 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 02 நிலையான வைப்புகளுக்குரிய மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 24,998 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளபடியான பெற வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 74,000 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 203,795 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 129,795 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 360,321 தொகை 2018 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 இணங்காமைகள்

#### 1.3.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) பிரதேச சபை விதி 59-66 | ஒவ்வொரு ஆண்டினதும் ஆரம்பத்தின் போதும் பிரதேசத்தில் மெய்மையாய்வை மேற்கொண்டு கைத்தொழில் வரி அறவிட வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டு அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம். 1647 (உ) | வாகனங்களின் விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்களால் அந்தந்த வாகனங்களின் வகை. வடிவம், பதிவு இலக்கம், தமக்கு கையளிக்கப்பட்ட திகதி, பொறுப்பளித்த திகதி மற்றும் அது தொடர்பான தகவல்களை |

| | |
|---|---|
| | காண்பிக்கின்ற பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2006 மே 30 ஆந் திகதிய 09/2006 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | வருகை மற்றும் வெளிச்செல்லல் நேரங்களை காண்பிப்பதற்காக விரலடையாள இயந்திரமொன்று பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,767,509 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,777,757 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) | வீதவரியும் வரியும் | - | 383 | 383 | - | 50 | 61 | 61 | - |
| (ii) | வாடகை | 6,612 | 6,013 | 5,902 | 453 | 5,929 | 5,930 | 6,164 | 352 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 286 | 302 | 302 | - | 505 | 408 | 408 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 4,778 | 6,391 | 6,019 | 323 | 4,068 | 6,464 | 6,350 | 368 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

சபையினால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 13,809,957 ஆக இருந்ததுடன், ஆண்டினுள் ரூபா 12,605,957

அறவிடப்பட்டிருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டிற்குரியதாக ரூபா 1,204,000 தொகை நிலுவையாக இருந்தது.

### 2.2.3 வீதவரி மற்றும் குத்தகை

சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசமானது அடிப்படை வசதிகளை கொண்ட பிரதேசமான போதிலும், சபையினால் இது வரையிலும் வீதவரி அறவீடொன்று இடம்பெற்றிராததுடன், வீதவரிகான மதிப்பீடொன்றை பெற்றுக்கொள்வதற்காக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 வாடகை வருமானம்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 453,483 தொகையான நிலுவை வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 ஏனைய வருமானம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் உள்ள 07 தொலைபேசி கோபுரங்கள் உள்ளதுடன், 2009 ஏப்ரல் 19 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் ஒரு தொலைபேசி கோபுரத்திற்காக அங்கீகாரத்தை வழங்குவதற்கு ஆகக் குறைந்தது ரூபா 20,000 வீதம் ரூபா 140,000 தொகையான ஆரம்பக் கட்டணமொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பெற வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 119,333 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 67,000 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

**(அ) கைவிடப்பட்ட பணிகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டினுள் மஹாஓயா உனுவதுர புபுல அண்மிய பிரதேசத்தினை பராமரிக்கும் செயற்திட்டத்தின் கீழ் வாடிவீடொன்றை நிர்மாணிப்பதற்கான ரூபா 653,779 தொகையான நிதியேற்பாட்டின் அடிப்படையில் ரூபா 535,936 செலவிடப்பட்டு வாடி வீடொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 ஆகஸ்ட் 08 ஆந் திகதி வரையிலும் அதன் பணிகள் நிறைவு செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தது.

(ii) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் 2017 ஆம் ஆண்டில் மஹாஓய பிரதேச சபைக்கு அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாடுகளில் மிகவும் சொற்பமான நிதியேற்பாட்டிற்குரிய நிர்மாணங்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், நிர்மாணங்களை நிறைவு செய்ய முடியாமையின் அடிப்படையில் எஞ்சிய நிதியேற்பாடு சபைக்கு கிட்டாது போயிருந்தது. விபரங்கள் பின்வருமாறு.

| செயற்திட்டம் | அங்கீகரிக்கப்பட்ட தொகை | நிறைவேற்றப்பட்டுள்ள பணிகளின் பெறுமதி | எஞ்சிய நிதியோற்பாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கெக்கிரிஹேன சந்தையை சுற்றிய பகுதியை பராமரித்தல் | 9,937,593 | 3,083,874 | 6,853,719 |
| சுடுநீர் ஊற்றினை சுற்றியுள்ள சூழலை பாராமரித்தல் | 10,657,543 | 3,653,229 | 7,004,314 |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல் தொடர்பில் சபை அறிந்திருக்கவில்லை.

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பதவியணியின் 05 பதவிகளுக்காக 07 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் மற்றும் பதவியொன்றின் மிகையொன்றும் நிலவியது.

(ஆ) சபையில் சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற 06 உத்தியோகத்தர்களிடமிருந்து 2008 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய

ரூபா 25,359 தொகையான கடன் மீதியை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

பிரதேச சபைக்குரிய 09 கடைகள் தொடர்பில் மேறட்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனைகளின் போது அந்த 09 கடைகளும் குத்தகை உடன்படிக்கைக்கு முரணாக 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இடைக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

### 3.3.2 சொத்துக்களிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானம் பெறப்படாமை

சபையினால் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 1,727,209 செலவிடப்பட்டு மஹாஓயா உனுவதுர புபுலவினை அண்மியதாக நிர்மாணிக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலை கட்டிடம் 2018 செப்தம்பர் வரையிலும் எந்தவொரு தரப்பினருக்கும் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் சபைக்கு பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

### 3.3.3 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

சபையினால் பல்வேறு பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற 36 காணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3.4 விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

புரநெகும செயற்திட்டத்தின் கீழ் 2015 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் ரூபா 40 மில்லியன் செலவிடப்பட்டு கெக்கிரஹேனயில் 24 கடைகளுடனான கடைத்தொகுதியொன்னும் வாரச் சந்தையொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் கடைத் தொகுதியொன்று 24 கடைகளுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு கடை உரிமையாளர்களுக்கு 2015 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் கையளிக்கப்பட்டிருந்தது. 2018 ஆகஸ்ட் 08 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது குறித்த கடை உரிமையாளர்கள் கடைகளை பெற்றுக்கொண்ட நாள் முதல் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை என்பதும், வாரச்சந்தை குறித்த பணிக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.3.5 வாகனப் பயன்பாடு

சபையினால் பயன்படுத்தப்படும் 21 வாகனங்களில் 10 வாகனங்களுக்குரியதாக அவற்றின் பெறுமதி, சபையினால் இனங்காணப்படாதிருந்த போதிலும், அந்த வாகனங்களுக்குரிய வருமான அனுமதிப்பத்திரங்கள் மற்றும் காப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**3.4 பெறுகைகள் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதி வெளியிடப்பட்ட தேசியப் பாதீட்டுச் சுற்றறிக்கையின் இலக்கம் 128 இன் பிரகாரம் சபையினால் 2017 ஆம் ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன், ஆண்டினுள் ரூபா 15,451,739 பெறுமதியான 25 பெறுகை நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுகளை சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மே 23 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 12 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் நிலவியமையால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமையும் கட்டுப்பாடும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபையின் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| **முறைமைகள்** | **கவனம் செலுத்தப்பட வேண்டிய துறைகள்** |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | - (i) நிலுவை வருமானத்தை அறவிடாமை<br>(ii) உப விதிகள் விதிக்கப்பட்டிராமை.<br>(iii) வருமான மூலங்கள் இனங்காணப்படாமை. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | - பாதீடு உரிய முறையில் தயாரிக்கப்படாமை. |
| (இ) களஞ்சிய நிர்வாகம் | - பொருட்களைக் களஞ்சியப்படுத்தல் உரிய முறையில் இடம்பெறாமை. |
| (ஈ) சொத்துக் கட்டுப்பாடு | - நிலையான சொத்துக்கள் உரிய முறையில் பேணப்படாமை. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கணக்கீடு | - (i) | சொத்துக்கள் கணக்கு வைக்கப்படாமை. |
| | | (ii) | முழுமையாக நிதிக்கூற்றுத் தொகுதிகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படாமை. |
| (உ) | ஒப்பந்த நிர்வாகம் | - (i) | போதியளவான மேற்பார்வையொன்று இல்லாதிருந்தமை. |
| | | (ii) | நிர்மாணங்களுக்கான கோவைகள் உரிய முறையில் பேணப்படாமை. |
| | | (iii) | சுற்றறிக்கைகளுக்கமைய பணிகளை நிறைவேற்றுவதிலான குறைபாடுகள் நிலவுகின்றமை. |